IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.144/2023

DEPOSITION OF WITNESS P.W. 1

| | | |
|---|---|---|
| NAME | : | REVATHI |
| HUSBAND NAME | : | KUMARAVEL |
| VILLAGE | : | AMBUR |
| OCCUPATION | : | HOUSE WIFE |
| AGE | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 23th day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஆம்பூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1வது எதிரி எனது கணவர். 2வது எதிரி எனது மாமனார் ஆவார். நானும் 1வது எதிரியும் 25.04.2011 அன்று திருவண்ணாமலையில் திருமணம் செய்து கொண்டோம். எனது அம்மா ஒசூரில் வீடு வாடகைக்கு பார்த்து அங்கயே இருவரும் தங்க வைத்தார். திருணம் ஆனதில் இருந்து எனது மாமனார் சீர்வரிசை கொண்டுவரவில்லை என்று திட்டிகொண்டே இருப்பார். கடந்த 16.01.2022 அன்று காலை 07.00 மணிக்கு எனது மாமனாரும், கணவரும் சேர்ந்து என்னை அடித்து கொலை செய்ய முயற்சி செய்தார்கள். நான் 108 ஆம்புலன்ஸ்கு போன் செய்து ஆம்புலன்ஸ் மூலம் குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைகாக சேர்ந்தேன். மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய பிறகு 18.01.2022 அன்று காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நானும் எனது கணவரும் எவ்வளவு நான் காதலித்து திருமணம் செய்து கொண்டோம் என்றால் 3 வருடம் ஆகும். அந்த 3 வருடங்களில் என்னுடைய குடும்ப சூழ்நிலை 1வது எதிரிக்கு தெரியும் என்றால் தெரியும். திருமணத்திற்கு பின்பு எனக்கும் 1வது எதிரிக்கும் 2 குழந்தைகள் பிறந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு நானும் 1வது எதிரியும் சில காலம் சந்தோஷமாக தான் வாழ்தோம் என்றால் சரிதான். அதற்கு பின்னர் தான் எனக்கும் 1வது எதிரிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால் சரிதான். நானும் 1வது எதிரியும் வெவ்வேறு சமூகத்தை சேரந்தவர்கள் என்றாலும் எதிரிகள் SC சமூகத்ததை சேர்ந்தவர்கள் என்றாலும், நான் MBC சமூகத்தை சேர்ந்வர் என்றாலும் சரிதான். நானும் 1வது எதிரியும் திருவண்ணாமலையில் எங்களுடைய

வீட்டிற்கு தெரியாமல் தான் திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். எனக்கும் எனது கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு எனது கணவர் மீது 2013 வருடம் குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். மேற்படி புகாரில் போலிசார் எங்கள் இருவரையும் அழைத்து சேர்ந்து வாழ அறிவுறித்தினார்கள் என்றால் நான் சேர்ந்து வாழ விருப்பமா இருந்ததால் எனக்கு அறிவுரை தேவையில்லை. அவருக்கு தான் அறிவறுத்தினார்கள். 1வது எதிரியுடன் சேர்ந்து வாழ நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுத்தேனா என்றால் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். 1வது எதிரியுடன் சேர்ந்து வாழ எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு எதிராக வாணியம்பாடி நீதிமன்றத்தில் ஜீவனாம்ச வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஆம்பூர் நீதிமன்றத்திலும் என் கனவருக்கும் ஜீவனாம்ச வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது கணவர் விவாகரத்து வேண்டி குடியாத்தம் சார்பு நீதிமன்றத்தில் HMOP 111/2019 தற்போது வரை தாக்கல் செய்து தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 16.01.2022 அன்று எனது கணவரும் மாமனாரும் என்னை அடித்ததாக புகார் அளித்துள்ள நிலையில் அந்த சமயத்தில் நானும், எனது கணவரும் தனிக்குடித்தனத்தில் இருந்தோம் என்றாலும் எனது மாமனார் தனியாக இருந்தார் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்த சமயத்தில் நானும், எனது கணவரும் தனிக்குடித்தனத்தில் இருந்தோம் என்றாலும் எனது மாமனார் தனியாக இருந்தார் என்றாலும் நீதிமன்றத்தில் முன்னுககு பின் முரணாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆம்பூர் நீதிமன்றத்தில் வழக்கு நான் தாக்கல் செய்த பின்னரும் குடியாத்தம் சார்பு நீதிமன்றத்தில் HMOP வழக்கை தாக்கல் செய்த பின்னரும் கூட நானும் எனது கணவரும் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான்.

16.01.2022 சம்பவம் நடந்து என்றாலும் 17.01.2022 அன்று போலிசார் மருத்துவமனையில் வந்து விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றாலும் சரிதான். வாக்குமூலம் கொடுத்தேன். 18.01.2022 அன்று தற்போது என்னிடம் காட்ப்பட்ட அ.சா.ஆ.1 புகார் மனுவை குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் அளித்த புகாரில் மேல் நடவடிக்கை எடுக்காததால் குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையதில் திரும்ப சென்று கேட்டேன் என்றால் சரிதான். நான் திரும்ப சென்று கேட்டதால் நான் அளித்த புகாரை மாவட்ட சமூக நலத்துறைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் மாவட்ட சமூக நலத்துறையில் நானே புகார் அளித்தேன்.

மாவட்ட சமூக நலத்துறை அளித்த புகாரில் என்னையும் எனது கணவரையும் அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். தனித்தனியாக அழைத்து விசாரணை செய்தார்கள். மேற்படி விசாரணையின் போது எனது கணவர் HMOP வழக்கு தாக்கல் செய்திருப்பதாலும், அவர் மீது தவறு இல்லாததாலும் மாவட்ட சமூக நலத்துறையில் இருந்து குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு எந்த அறிக்கையும் அனுப்பவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் மீது தவறு இல்லாததால் மாவட்ட சமூக நலத்தைுறயில் இருந்து குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு எந்த அறிக்கையும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. மாவட்ட சமூக நலத்துறையில் எந்த நடவடிக்கையும் எடுக்கதாதால் நான் SP மற்றும் IGயிடம் புகார் அளித்தேன் என்றால் சரிதான். குடியாத்தம் அனைதது மகளிர் காவல் நிலைய்தில் நான் அளித்த புகாரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தற்கொலை

செய்து கொவேன் என்று மிரட்டினேன் என்றால் சரியல்ல. நான் நிர்பந்தபடுத்தியதன் பேரில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. புகாரில் உண்மை இருந்ததால்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். HMOP வழக்கை தாக்கல் செய்த பின்னர் எனது கணவர் எனக்கும் பிள்ளைகளுக்கும் கணவர் என்ற முறையில் பராமறிப்பு தொகை கொடுக்கிறார் என்றால் நான் DO, Collecter Officeலும் புகார் அளித்ததால் கொடுகிறார். நான் B.Sc., B.Ed படித்துள்ளேன். எனது கணவர் M.Sc., B.Ed., படித்துள்ளார். நாங்கள் இருவரும் விருப்பபட்டு திருமணம் செய்து கொண்டதால் என்னுடைய சூழ்நிலையை தெரிந்துதான் 1வது எதிரி திருமணம் செய்து கொண்டார் என்றாலும் அதனால் வரதட்சணை கேட்டிருக்க வாய்பில்லை என்றாலும் சரியல்ல. 1வது எதிரி என்னை விரும்பி திருமணம் செய்து கொண்டடார் என்றாலும் எனது அம்மாவிற்கு எனது திருமணத்தில் விருப்பம் இல்லாததால் அவருடைய பேச்சை கேட்டு புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி எப்போதும் எனக்கு நல்ல கணவராக இருந்துள்ளார் என்றாலும் நான் 1வது எதிரியை அலைகழிப்பதை வழக்கமாக கொண்டுள்ளதால் இந்த புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது புகாரிலும் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளது போல் எதிரிகள் என்னை கொடுமை செய்யவில்லை என்றால் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.